**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 8 June 2022

# இந்திய சிறுபான்மை சமூகங்கள் பற்றிய புதிய நூல் தொகுப்பு

சிங்கப்பூரில் வாழும் தமிழ் கத்தோலிக்கர்கள், இந்துஸ்தானியர்கள், குஜராத்தியினர், வங்காளர்கள், தெலுங்கர்கள் ஆகிய சிங்கப்பூர் இந்தியச் சிறுபான்மை சமூகங்கள் பற்றிய வரலாற்றைப் பறைசாற்றும் புதிய நூல் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச் சமூகங்கள் பற்றிய ஆவணப் படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாட்டின் 5.6 மில்லியன் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட ஒன்பது விழுக்காட்டினர் இந்தியர்கள். இவர்களில் பெரும்பாலோர் தமிழ் இந்துக்கள்.

இந்தியச் சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள், ‘ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த சிறுபான்மையினர்’ என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுத் திட்டத்துக்குத் தலைமை தாங்கும் இணைப் பேராசிரியர் ராஜேஷ் ராய் குறிப்பிட்டார். மூத்த விரிவுரையாளர் ஜெயத்தி பட்டாச்சார்யாவுடன் இணைந்து அவர் இத்திட்டத்தை வழிநடத்தியுள்ளார்.



‘மறைந்திருக்கும் மரபு: சிங்கப்பூர் இந்தியச் சிறுபான்மை சமூகங்கள் பற்றிய தொகுப்பு’ எனும் இந்நூல் தொகுப்பைப் பொதுமக்கள் தேசிய நூலகத்திலிருந்து இரவல் பெறலாம். **படம்: NEWS.NUS.EDU.SG**

ஒவ்வொரு சமூகமும் சிங்கப்பூருக்கு இடம்பெயர்ந்த வரலாறு, அதன் கலாசாரம், விழாக்கள், அவர்களுடைய தேவைக்காக கட்டப்பட்ட நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற முக்கியமான இடங்களின் தகவல்களும் இந்தத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன.

உதாரணத்திற்கு, 19ஆம் நூற்றாண்டிலிருந்து சிங்கப்பூர் தமிழ் கத்தோலிக்கர்கள் வழிபாட்டுக் காகச் சென்றுவரும் ரோச்சோர் வட்டாரத்தில் உள்ள லூர்து மாதா தேவாலயமும் நூல் தொகுப்பில் இடம்பெறுகிறது.

“இந்தியச் சிறுபான்மை சமூகம் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட அடையாளங்களும் அனுபவங்களும் இருந்தாலும், ஒவ்வொரு சமூகமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணையப்பட்டவை,” என்று பேராசிரியர் ராய் கூறினார்.

தேசிய மரபுடைமைக் கழகம் இத்திட்டத்துக்கு நிதி ஆதரவு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு நூல் தொகுப்புக்கும் 12லிருந்து 18 நிமிடங்கள் வரையிலான ஆவணப்படம் உண்டு. இதில் தத்தம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பேட்டி அளித்துள்ளனர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் கற்பித்தலுக்கு இவை பயன்படுத்தப்படும்.

‘மறைந்திருக்கும் மரபு: சிங்கப்பூர் இந்தியச் சிறுபான்மை சமூகங்கள் பற்றிய தொகுப்பு’ எனும் இந்நூல் தொகுப்பைப் பொதுமக்கள் தேசிய நூலகத்திலிருந்து இரவல் பெறலாம்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.